குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
எம்.சி.எண்.10/2020

ம.சா.1

2024–ம் ஆண்டு அக்டோபர் 04–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரியம்மாள் | ஜாதி | |
| கணவர் பெயர் | பழனிசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 02.21 மணி,

Petitioner Mariyammal present. Advocate Mr.Nandhakumar present for Petitioner. Respondent Palanisami Present. Advocate Mr.B.Sivaram present for respondent. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை.**

1. நான் தாரமங்கலம் எம்.ஜி.ஆர் காலனியில் வசித்து, பழம் விற்று வருகிறேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் வாக்குமூலம் மூலம் பதிவு செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் எனது தரப்பு சாட்சியத்தில் எதிர் மனுதாரரின் ஓய்வூதிய கணக்கீட்டை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திடம் இருந்து பெற்று அதனை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட எதிர்மனுதாரரின் ஓய்வூதிய சான்று ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி சான்றின் நம்பகத்தன்மை மற்றும் தொடர்புடைமை குறித்து ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆவணம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. நான் ம.சா.ஆ.6 ஆவணத்தை தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் எவ்வாறு பெற்றேன் என்று ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரி. மேற்படி ஆவணத்தில் எதிர்மனுதாரரின் ஓய்வூதியம் முன்கூட்டுத் தொகை ரூ.1,88,749/– 10.04.2014 ஆம் தேதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி ஆவணத்தின் கோரிக்கை வரிசை எண்.3 முதல் 5 வரைதான் குறிக்கப்பட்டுள்ளது என்றாலும், 1, 2 கோரிக்கைகள் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரி. எதிர்மனுதாரர் ஓய்வு பெற்றபோது,

2. நான் அவருடன் தான் வசித்து வந்தேன் என்றால் சரி. நான் மாதம் ஒன்றிற்கு 4 சந்தைகளில் சென்று வாழைப்பழ வகைகள் விற்பேன். ஒவ்வொரு பழ வகையும் வேறுபட்ட விலைகளில் விற்று வருவேன். சுமார் இரண்டாயிரம் வரை ஒரு முறை சந்தை சென்றால் கொள்முதல் செய்வேன். ரூ.300 முதல் ரூ.500 லாபம் கிடைக்கும். எதிர்மனுதார் ஓய்வூதியம் முன்கூட்டுத் தொகை ரூ.1,88,749/– பெற்றபோது, அதை எனக்கும், அவரது இரண்டாவது மனைவிக்கும் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

3. எதிர்மனுதாரர் போனமாதம் கோவை மருத்துவமனையில் குடல் இறக்கத்திற்காக சிகிச்சை பெற்று வந்தது குறித்து எனக்கு தெரியும். அவருக்கு சர்க்கரை நோய் உள்ளது என்றால், அது பற்றி எனக்கு சரிவர தெரியவில்லை. எதிர்மனுதாரருக்கு மாதம் ரூ.5,000/– வரை மருத்துவ செலவு உள்ளது என்றாலும், அவர் மருந்து மாத்திரை எடுத்து வருகிறார் என்றால், நானும் அதே அளவிற்கு மருத்துவ செலவுகள் செய்து வருகிறேன். எதிர்மனுதாரர் என்னை அழைத்து சென்று ஒன்றாக வாழ தற்போது தயாராக உள்ளார் என்றால், எனக்கு சர்க்கரை மற்றும் ரத்த அழுத்த நோய் உள்ளதால் என்னால் சமையல் செய்ய இயலாது. நான், நேற்று எதிர்மனுதாரருக்கு பசி என்று கேட்டதால் ரூ.100/– கடனாக கொடுத்தேன் என்றால் சரி. என்னை கட்டாயப்படுத்தி வாங்கிக் கொண்டார். எதிர்மனுதாரர் என்னுடன் வாழ தயாராக இருப்பதாகவும், நான் அவருடன் சேர்ந்து வாழ மறுப்பதாலும் நான் ஜீவனாம்சம் பெறுவதற்கு தகுதியானவர் அல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 02.43 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.